# வாக்களிப்பதற்கு எவ்வாறு பதிவு செய்வது

பிரித்தானியாவில் வசிக்கும் பிரித்தானியா, காமன்வெல்த் மற்றும் அயர்லாந்து குடியரசு ஆகிய நாடுகளின் ஒவ்வொரு பிரஜையும் இந்த நாட்டின் தேர்தலில் வாக்களிக்கும் தகுதி உடையவர். மற்ற அனைத்து ஐரோப்பிய ஒன்றியங்களின் பிரஜைகள், ஐரோப்பாவின் பாராளுமன்றத் தேர்தலிலும் இங்கு நடக்கும் உள்ளூர் தேர்தல்களிலும் வாக்களிக்கும் தகுதி உள்ளவர்கள்.

<u>தகுதியுடைய நாடுகள்</u>

தேர்வாளர் பதிவேட்டில் (வாக்காளர் பட்டியல் என்றும் அழைக்கப்படும்) உங்கள் பெயர் இருந்தால் மட்டுமே நீங்கள் வாக்களிக்க முடியும். ஒவ்வொரு இலையுதிர் காலத்தின் போதும், உங்கள் வீட்டில் வழங்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து திரும்ப அனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், டிசம்பர் 1 ஆம் திகதி, புதிய பதிவேட்டை நாங்கள் வெளியிடுகின்றோம்.

வருடம் முழுவதும் எங்களால் பெயர்களைச் சேர்க்க, நீக்க, திருத்த முடியும், மற்றும் டிசம்பரில் இருந்து ஆகஸ்ட் வரையிலும் ஒவ்வொரு மாதமும் பதிவேட்டை மேம்படுத்த முடியும்.

நீங்கள் வேறு முகவரிக்கு மாறினால், நீங்கள் புதிய பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு படிவத்தில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும், மேலும், உங்கள் படிவத்தில் நீங்கள் தான் கையொப்பமிட வேண்டும். வேறு ஒருவர் உங்களுக்காக அதைச் செய்ய முடியாது.

கவுன்சில் வரிக்கான பட்டியலில் இருப்பது என்பதற்கு நீங்கள் வாக்களிக்க பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்று அர்த்தமல்ல.

ஒரு படிவத்தை இறக்கிப் பெற்றுக் கொள்வதற்கு (download) கீழ்கண்ட தொடர்பைக் 'கிளிக்' (click) செய்யுங்கள்.

<u>Registration form- பதிவு செய்வதற்கான படிவம்</u>

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், வாக்காளார் பதிவுச் சேவையை, 020 8871 6023 அல்லது (ஆங்கிலத்திற்கான உதவி பெற) வான்ட்ஸ்வொர்த் மொழி பெயர்ப்புச் சேவையை, 020 8672 1043 எண்ணிலோ தொடர்பு கொள்ளுங்கள்.

"How to vote"- (Tamil)
September 2007
Translated by Wandsworth Interpreting Service